கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) & (இ) தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தின் தலைமைப் பொறியாளர்—நிர்வாகி தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்காகத் தயாரித்த திட்ட விவர அறிக்கையில் தொழில் நுட்ப ஆலோசனைக் குழு செய்யக் கருதியுள்ள முக்கிய மாறுதல்கள் பின்வருவனவற்றிற்குச் சம்பந்தமுடையவையென்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

(1) ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கப்பல்களை நிறுத்துவதற்கு இப் பெரிய துறைமுகத்தில் வசதிகள் செய்து தருதல் ;

(2) ஐந்து கப்பல் துறைகளில் இரண்டின் வடிவமைப்பை பெரிய மரக்கலங்கள் வருவதற்கேற்பவும் அவை 35 அடி நீரில் அமிழ்ந்திருக்கும் வகையில் பின்னர் இவற்றை ஆழப்படுத்தும் வகையிலும் அமைத்தல்.

திரு. வை. சங்கரன் : இந்த மாறுதலோடு இந்தத் தூத்துக்குடி துறைமுக பிராஜக்ட் எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்த மாறுதல் யோசனையையும் வைத்து, மொத்த வேலைகளோடு சேர்த்து இதையும் நடத்திக் கொண்டிருக்கிருர்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த விரிவான திட்டத்தோடு சேர்ந்து, தூத்துக்குடியின் அருகாமையிலுள்ள புன்னைகாயல் போன்ற சிறிய துறைமுகங்களையும் சீர்படுத்தி, அதில் சிறிய கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சுவதற்குரிய வகையில் சீர்படுத்துவதற்கான திட்டம் இதோடு சேர்க்கப்பட்டிருக்கிறதா, இல்லையென்ருல் இதையும் சேர்ப்பதற்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இது சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டைப் பொறுத்ததல்ல. சென்னை சர்க்கார் செய்ய வேண்டிய வேலைகள், அதாவது மைனர் போர்ட்ஸ் என்பதின் கீழ் வரும். இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் இதைப் பற்றிய எல்லா விவரங்களையும் கொடுக்கலாம்.

காதி இலாகா உற்பத்தி செய்த நூல்

***131 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ல் காதி இலாகாவால் உற்பத்தி செய்யப்பட்ட நூல் நம்பர் வாரியாக எத்தனை கெஜம் ?

(இ) அதற்காக உபயோகிக்கப்பட்ட பஞ்சு ரோல்கள் ரகவாரியாக எத்தனை பேல்கள் ?

கனம் திரு ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :

	மெட்ரிக் சிட்டங்கள். லட்சம்
(அ) (1) **முரட்டு ரகம் :**	
ஆங்கில நெம்பர் 12-லிருந்து 18 வரை (அதாவது) மெட்ரிக் நெம்பர் 20-லிருந்து 30 வரை.	55·00

5th August 1966]

	மெட்ரிக் சிட்டங்கள் லட்சம்.
(2) நடுத்தர ரகம் :	
ஆங்கில நெம்பர் 19-லிருந்து 24 வரை (அதாவது) மெட்ரிக் நெம்பர் 31-லிருந்து 41 வரை.	121·88
(3) உயர்ந்த ரகமும் மிக உயர்ந்த ரகமும் :	
ஆங்கில நெம்பர் 25-ம் அதற்கு மேலும் (அதாவது) மெட்ரிக் நெம்பர் 42-ம் அதற்கு மேலும். (ஒரு சிட்டம் 1,000 மீட்டர்கள்)	44·00

	கிலோ கிராம்கள்.
(இ) நெட்டிழைப் பருத்தி	4,35,707·060
சிற்றிழைப் பருத்தி	2,48,021·299

பதநீர் பற்றிய செய்திப் படம்

*132 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இந்த ஆண்டில், காதி இலாகாவினுல் பதநீர் அருந்து வதைப்பற்றி பிரசாரம் செய்ய செய்திப் படம் ஏதேனும் தயாரிக் கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தப் படம் தயாரிக்க எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) & (இ) சென்னை மாநில கதர் கிராம கைத்தொழில் போர்டினுல் இந்த ஆண்டில் பதனீர் பிரசாரம் செய்ய செய்திப் படம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. ஆனுல், சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் 1964-65-ல் "குறைவற்ற செல்வம்—பதனீர்" என்று செய்திப் படம் ஒன்று தயாரித்துள்ளது. இதற்கான செலவுத் தொகை ரூபாய் 17,221.52.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இந்தச் செய்திப் படத்திளுல் சர்க்காருக்கு ஏற்பட்ட செலவைப்பற்றிச் சொன் ஞர்கள், இவ்வளவு செலவு செய்த படத்தின் மூலமாக ஏதாவது லாபம் ஏற்பட்டதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்தச் செய்திப் படத்தை தயாரிப்பதற்கான செலவை இதற்குள்ள பெட ரேஷன் கொடுத்திருக்கிருர்கள். அவ்விதம்தான் செய்திப் படம் தயாரிக்கப்பட்டது . . .

கனம் சபாநாயகர் : லாபம் ஏதாவது உண்டா என்று கேட்கிருர் கள்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்தப் படத்தைப் பார்த்து, அதிலுள்ள முறைகளைப் பின்பற்றி நல்ல முறையில் பதனீர் தயாரிக்கின்ற முறைகளைத் தெரிந்து கொள்ள லாம். அது தான் லாபம்.